ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2169/2 - 2020 මාර්තු මස 31 වැනි අඟහරුවාදා - 2020.03.31
*2169/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

**சனாதிபதியின் பணிப்புரை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுஅரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் இலங்கையில் கல்வி நடவடிக்கைகள் பற்றிய செயலணியொன்றை நிறுவுதல்.*

1. திரு. டி. எம். ஏ. ஆர். பீ. திசாநாயக்க
   செயலாளர், உயர் கல்வி அமைச்சு, தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க அமைச்சு
2. திரு. என். எச். எம். சித்திரானந்த
   செயலாளர், கல்வி அமைச்சு
3. திரு. டி. எம். எஸ். அபேகுணவர்த்தன
   செயலாளர், திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு
4. பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்கள்
   தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. சிரேட்ட பேராசிரியர் (திருமதி) சந்திரிகா என். விஜேரத்ன
   உபவேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. பேராசிரியர் யூ. பீ. திசாநாயக்கா அவர்கள்
உபவேந்தர், பேராதனைப் பல்கலைக்கழகம்

7. பேராசிரியர் சுதந்த லியனகே அவர்கள்
பதில் உப வேந்தர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

8. பேராசிரியர் லக்ஷ்மன் செனெவிரத்ன அவர்கள்
பதில் உப வேந்தர், களனி பல்கலைக்கழகம்

9. பேராசிரியர் கே. கே. சி. கே. பெரேரா அவர்கள்
உபவேந்தர், மொரட்டுவை பல்கலைக்கழகம்

10. பேராசிரியர் கே. கந்தசாமி அவர்கள்
பதில் உப வேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

11. சிரேட்ட பேராசிரியர் ரி. எஸ். டி. அமரசேன அவர்கள்
உபவேந்தர், றுகுணு பல்கலைக்கழகம்

12. பேராசிரியர் எஸ். ஏ. அரியதுரை அவர்கள்
உபவேந்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

13. பேராசிரியர் எப். சி. ரேகல் அவர்கள்
உபவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்

14. பேராசிரியர் எம். எம். எம். நஜீம் அவர்கள்
உபவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

15. கலாநிதி பீ. ஏ. கருணாரத்ன அவர்கள்
உபவேந்தர், ரஜரட்ட பல்கலைக்கழகம்

16. பேராசிரியர் சுனில் சாந்த அவர்கள்
உபவேந்தர், சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

17. பேராசிரியர் ஈ. எம். பி. ஏக்கநாயக்க அவர்கள்
உபவேந்தர், வயம்ப பல்கலைக்கழகம்

18. கலாநிதி ஜே. எல். ரத்னசேகர அவர்கள்
பதில் உப வேந்தர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

19. பேராசிரியர் டப்.எம். அபேரத்னபண்டாரஅவர்கள்
தகுந்த அதிகாரி,அழகியல் கலை பல்கலைக்கழகம்

20. வண. மார்க் பிலிமோரா அவர்கள்
அதிபர், புனித தோமஸ் கல்லூரி, கல்கிசை

21. வண. அருட் சகோதரி அலெக்ஸ்சான்ரா மெண்டிஸ் அவர்கள்
அதிபர், சென்ற். பிரிஜட் கன்னியர் மடம், கொழும்பு 07

22. திரு.எஸ்.எம். கீர்த்திரத்ன
அதிபர், ஆனந்தா கல்லூரி, கொழும்பு 10

23. திருமதி சந்தமாலி அவ்ருப்பொல
அதிபர், விசாக்கா கல்லூரி, கொழும்பு 05

24. திரு. டப். எம். டி. ரி. பி. வனசிங்க
அதிபர், தர்மராஜா கல்லூரி, கண்டி

25. திரு. எப். வெலேகே
அதிபர், ராகுல வித்தியாலயம், மாத்தறை

26. வைத்தியர் ஹர்ஷ அலஸ் அவர்கள்
தலைவர், கேட்வே பாடசாலைகள் தொகுதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கையில் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் கல்வித் துறைகளைக் காலத்தின் தேவைக்கேற்ப உகந்தவாறு நவீனமயமாக்குவது அவசியம் என இனங்காணப்பட்டுள்ளதாலும், மேலும் இதுவரை உக்கிரமடைந்துள்ள கொரோனா தொற்று நிலைமையில் கல்வித்துறைக்கு

எவ்விதத்திலும் தடை ஏற்படாதவாறு தொடர்ந்து முன்னோக்கிக்கொண்டு செல்லும் திறமுறைகளை வகுப்பதன் தேவை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்,

1. திரு. டி. எம். ஏ. ஆர். பீ. திசாநாயக்க
   செயலாளர், உயர்கல்வி அமைச்சு, தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க அமைச்சு
2. திரு. என். எச். எம். சித்திரானந்த
   செயலாளர், கல்வி அமைச்சு
3. திரு. டி. எம். எஸ். அபேகுணவர்த்தன
   செயலாளர், திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு
4. பேராசிரியர் சம்பத் அமரதுங்க அவர்கள்
   தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. சிரேட்ட பேராசிரியர் (திருமதி) சந்திரிகா என். விஜேரத்ன
   உபவேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்
6. பேராசிரியர் யூ. பீ. திசாநாயக்கா அவர்கள்
   உபவேந்தர், பேராதனைப் பல்கலைக்கழகம்
7. பேராசிரியர் சுதந்த லியனகே அவர்கள்
   பதில் உப வேந்தர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
8. பேராசிரியர் லக்ஷ்மன் செனெவிரத்ன அவர்கள்
   பதில் உப வேந்தர், களனி பல்கலைக்கழகம்
9. பேராசிரியர் கே. கே. சி. கே. பெரேரா அவர்கள்
   உபவேந்தர், மொரட்டுவை பல்கலைக்கழகம்
10. பேராசிரியர் கே. கந்தசாமி அவர்கள்
    பதில் உப வேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
11. சிரேட்ட பேராசிரியர் ரி. எஸ். டி. அமரசேன அவர்கள்
    உபவேந்தர், றுகுணு பல்கலைக்கழகம்
12. பேராசிரியர் எஸ். ஏ. அரியதுரை அவர்கள்
    உபவேந்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
13. பேராசிரியர் எப். சி. ரேகல் அவர்கள்
    உபவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்
14. பேராசிரியர் எம். எம். எம். நஜீம் அவர்கள்
    உபவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
15. கலாநிதி பீ. ஏ. கருணாரத்ன அவர்கள்
    உபவேந்தர், ரஜரட்ட பல்கலைக்கழகம்
16. பேராசிரியர் சுனில் சாந்த அவர்கள்
    உபவேந்தர், சப்பிரகமுவ பல்கலைக்கழகம்
17. பேராசிரியர் ஈ. எம். பி. ஏக்கநாயக்க அவர்கள்
    உபவேந்தர், வயம்ப பல்கலைக்கழகம்
18. கலாநிதி ஜே. எல். ரத்னசேகர அவர்கள்
    பதில் உப வேந்தர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
19. பேராசிரியர் டப்.எம். அபேரத்னபண்டாரஅவர்கள்
    தகுந்த அதிகாரி, அழகியல் கலை பல்கலைக்கழகம்
20. வண. மார்க் பிலிமோரா அவர்கள்
    அதிபர், புனித தோமஸ் கல்லூரி, கல்கிசை
21. வண. அருட் சகோதரிஅலெக்ஸ்சான்ரா மெண்டிஸ் அவர்கள்
    அதிபர், சென்ற். பிரிஜட் கன்னியர் மடம், கொழும்பு 07

22. திரு. எஸ். எம். கீர்த்திரத்ன
அதிபர், ஆனந்தா கல்லூரி, கொழும்பு 10

23. திருமதி சந்தமாலி அவ்ருப்பொல
அதிபர், விசாக்கா கல்லூரி, கொழும்பு 05

24. திரு. டப். எம். டி. ரி. பி. வனசிங்க
அதிபர், தர்மராஜா கல்லூரி, கண்டி

25. திரு. எப். வெலேகே
அதிபர், ராகுல வித்தியாலயம், மாத்தறை

26. வைத்தியர் ஹர்ஷ அலஸ் அவர்கள்
தலைவர், கேட்வே பாடசாலைகள் தொகுதி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து,மேற்குறிப்பிட்ட தங்களை இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் பற்றிய செயலணியின் உறுப்பினர்களாக பின்வரும் பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் கல்வி அலுவல்களை மேற்கொள்ளுவதற்குச் சமீபத்தில் தடைகள் ஏற்பட்டதன் காரணமாக செய்து முடிக்காத பணிகளை முடிவுறுத்தி கல்வி கற்கும் மாணவர்களின் பரீட்சை நடவடிக்கைகள் மற்றும் விடய சிபார்சுகளை உரியவாறு செயற்படுத்துவதற்குத் தேவையானதிறமுறைகளை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்

2. இக்காலப் பகுதியினுள் தொலைக்கல்வி எண்ணக்கருவின் கீழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கான திறமுறைகளை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்

3. தொழில்திறன் கல்விக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இனங்கண்டு அதனூடாக வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்காக ஆக்கபூர்வமான திறமுறைகளை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்

4. பல்கலைக்கழகத்திற்குப் புதிய ஆட்சேர்ப்புகளை விரைவுபடுத்தி அம்மாணவர்களுக்கும் தொலைக்கல்விக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி அதனூடாக உயர்கல்விக்கான சந்தர்ப்பங்களைப் பரவலாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்

5. கல்வித் துறையின் பண்புசார் தன்மையை உயர்த்துதல் மற்றும் மாணவர்கள் காலத்தின் தேவைக்குப் பொருந்தும் விடயங்களுக்கு கவனம் செலுத்தும் கல்விமுறைகள் உள்ளிட்ட வேறு பயிற்சி வேலைத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்

மேலும், திரு. டி. எம். ஏ. ஆர். பீ. திசாநாயக்க, செயலாளர், உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் திரு. என். எச். எம். சித்திரானந்த, செயலாளர், கல்வி அமைச்சு ஆகியோரை மேற்போந்த செயலணியின் இணைத் தலைவர்களாக நியமிக்கின்றேன்.

மேலும், இச்செயலணியின் செயலாளராக உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி தீபாலியனகே அவர்களை நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களைத் தேடிப் பார்ப்பதற்கும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் மேற்போந்த சனாதிபதி செயலணிக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், மேற்போந்த செயலணியின் உறுப்பினர்களான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், இச் சனாதிபதி செயலணிக்கு ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஆதரவு கோரக்கூடிய சகல அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்படவேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரசாங்க ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரசாங்க திணைக்களமொன்றின், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால்

ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.